








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 24.09.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்
- வர்த்தக நிகழ்வுகள்











# தமிழக நிகழ்வுகள்

- எல்லைகள் மறுசீரமைப்பு குழுவின் பணி நிறைவடைந்த உடன் **நாகர்கோவில் நகராட்சி, மாநகராட்சியாக** தரம் உயர்த்தப்படுவதாக தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- குறிப்பு
  - தமிழகத்தில் தற்போது நிலவரப்படி 12 மாநகராட்சிகள் உள்ளது. சென்னை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட ஆண்டு – 1688, மதுரை – 1971, கோவை – 1981, திருச்சி - 1994, சேலம் - 1994, நெல்லை – 1994, வேலூர் - 2008, தூத்துக்குடி – 2008, திருப்பூர் - 2010, ஈரோடு – 2010, தஞ்சாவூர் - 2013, திண்டுக்கல் - 2014

# இந்திய நிகழ்வுகள்

- ஆந்திர மாநிலத்தில், **150 ஹெக்டர் பரப்பளவில் நகரவனம்** என்ற பெயரில் **மரம் நடும்** திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
  - நகரவனம் என்ற பெயரிலான மரம் நட்டுப் பராமரிக்கும் திட்டம் செப்டம்பர் 22 அன்று **திருப்பதியில்**, அம்மாநில முதல்வரால் தொடங்கப்பட்டது.

- சர்வதேச அளவில் ஒரு நாட்டின் அரசால் நிதி ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்படும் உலகின் மிகப் பெரிய மருத்துவக்காப்பீட்டுத் திட்டமான, **ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை**, பிரதமர் நரேந்திர மோடி செப்டம்பர் 23 அன்று தொடங்கி வைத்துள்ளார்.
  - பிரதமர் **ஜன ஆரோக்ய யோஜனா** என அழைக்கப்படும் இந்த மருத்துவ காப்பீட்டு திட்டம் 3, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அமல்படுத்த உள்ளது.
- குறிப்பு
  - மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து ஒவ்வொரு ஏழைக் குடும்பத்துக்கும் ஆண்டுக்கு **100 முதல் 1200** வரை காப்பீடு செலுத்தி, ஒரு குடும்பத்துக்கு **ரூ.5 லட்சம்** வரை இலவச மருத்துவ சிகிச்சை பெறும் வகையில் இந்த மருத்துவ காப்பீடு

திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- உலகில் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடுகள் குறித்த ஆய்வறிக்கையை அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ளது.
    - இந்த ஆய்வறிக்கையில் **ஈராக், ஆப்கானிஸ்தான்** நாடுகளுக்கு அடுத்தப்படியாக தீவிரவாதத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட **3வது நாடாக இந்தியா** உள்ளது.

- சூரியனைச் சுற்றிவரும் நுண்கோளில் ஒன்றான ரியுகு, பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதற்காக ஜப்பான் விண்வெளி அமைப்பான **JAXA** அமைப்பானது **'ஹாயாபுஸா-2' Hayabusa-2** என்னும் ஆய்வுகலத்தை ஜுன் 27 அன்று விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த ஆய்வுகலம் செப்டம்பர் 22-அன்று வெற்றிகரமாக ரியுகுவில் தரையிறங்கியுள்ளது. இதன் மூலம், நுண்கோளில் இறங்கி சோதனை செய்த முதல் கண்காணிப்பு ஆய்வு கலம் என்ற சிறப்பை **'ஹாயாபுஸா-2'** பெற்றுள்ளது.

## விருதுகள்

- மெக்சிகோ நாட்டின் வெளிநாட்டினருக்கு வழங்கப்படும் உயர்ந்த விருதான **'Maxican order of the Aztec Eagle'** – விருதுக்கு இந்தியாவின் **டாக்டர். ரகுபதி சிங்கானியா** தேர்வு செய்யப்பட்டுள்ளார். டாக்டர். ரகுபதி சிங்கானியா ஜே.கே. டயர் நிறுவனத்தின் தலைவர் ஆவார்.

- **பிரியதர்ஷினி அகாதெமியின்**, 2018ம் ஆண்டின் **ஸ்மிதா பாட்டீஸ் Smita Patil** நினைவு விருது, இந்தி நடிகை **அனுஷ்கா ஷர்மா** அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## முக்கிய தினங்கள்

- முதலாவது சர்வதேச சைகை மொழிகள் நாள் - செப்டம்பர் 23 **(International Day of Sing Language)**
  - சர்வதேச சைகை மொழிகள் நாள், முதன் முறையாக செப்டம்பர் 23, 2018 அன்று கொண்டாடப்படுகிறது.
  - 2018 செப்டம்பர் 24 முதல் 30 வரை, சர்வதேச **காது கேளாதோர் வாரம் கடைபிடிக்கப்படுகிறது.** இதன் ஒரு பகுதியாக முதலாவது சர்வதேச சைகை மொழிகள் நாள் கடைபிடிக்கப்படுகிறது.
  - 2018 சர்வதேச சைகை மொழிகள் தினத்தின் கருப்பொருள்: **'With sign Language, Everyone is included'**

## வர்த்தக நிகழ்வுகள்

- அரசு தொழிலாளர் காப்பீட்டு நிறுவனம், **அடல் பிமித் வியக்தி கல்யாண் யோஜனா Atal Bimit Vyakti Kalyan Yojana** என்ற திட்டத்தை, தொழிலாளர்களுக்கான **அரசு காப்பீட்டுச் சட்டம் - 1948ன்** கீழ் காப்பீடு பெற்ற தொழிலாளர்களுக்காக அங்கீகரித்துள்ளது.
  - இத்திட்டம் தொழிலாளர்களின் வேலையின்மையின் போதும், அவர்கள் எப்பொழுது புதிய வேலையை தேடுகிறார்களோ அப்பொழுதும் அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக உதவித்தொகை செலுத்தும் வசதியாகும்.

- 2018-2019 நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, **7.8 சதவீதமாக** அதிகரிக்கும் என சர்வதேச தரக் குறியீட்டு அமைப்பான **ஃபிட்ச் Pitch** தெரிவித்துள்ளது.